தனிப் பிரதி ரூ. 5/–
ஆண்டுச் சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்


## செய்திமலர்

மலர் : 9
இதழ் : 5
மார்ச் – 2013



**...அவரை (கிறிஸ்து இயேசுவை) தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.** அப்போஸ்தலர் 3:15

ஆசிரியர் பேராயர். வே. தேவதாஸ்






# Rev. சோம்லா புரியா

## ரூபாகேடா, மத்தியப்பிரதேசம்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் சோம்லா புரியா. நான் மத்தியப்பிரதேசத்திற்கும் குஜராத்திற்கும் எல்லையில் அமைந்துள்ள ரூபாகேடா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசு கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்தவன். பாவத்தைக் குறித்த எந்த விதமான அறிவும் எனக்கில்லாமல், பீடி, தம்பாக்கு, சாராயம் போன்ற போதை வஸ்துகளுக்கு அடிமையாகவும், அநேக பாவங்களைச் செய்தும் வந்தேன்.

இந்த சூழ்நிலையில் நாங்கள் பிழைப்பிற்காக வளர்த்து வந்த மாடு உடல் நிலை சரியில்லாமல் போனது, இது 20 ஆண்டுகளாக நோய் வாய்ப் பட்டிருந்தது. எனது தந்தையும் 20 ஆண்டுகளாக தொடர்ந்து சாராயம் குடித்துவிட்டு வீட்டில் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தார். சமாதானம் இல்லாமல் வாழ்ந்து வந்தோம்.

ஒரு நாள் எனது மாமாவின் மகன் சுக்கியா பாய் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி, ஜெரி கிராமத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைத்துச் சென்றான். நாங்களும் குடும்பமாக அங்கு சென்று ஆராதனையில் கலந்து கொண்டோம். பின்னர் ஊழியர் சகோ. சாம்ஜி மேடா கிறிஸ்துவின் அன்பைக் குறித்துக் கூறி எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார். பின்பு வீட்டிற்கு வந்து வியாதிப்பட்டிருந்த மாட்டிற்காகவும் ஜெபித்தார். தேவன் ஜெபத்தினைக் கேட்டு உடனடியாக மாட்டிற்கு பூரண சுகத்தினைக் கொடுத்தார்.

இந்த அற்புதத்தினைக் கண்ட எனது தகப்பனாரும் இயேசு கிறிஸ்துதான் உண்மையான தெய்வம் என அறிக்கை செய்து தனது குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலை பெற்றார். நானும் எனது பாவங்களை அறிக்கையிட்டேன். எங்கள் குடும்பத்தில் அனைவரும் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டோம். தேவன் எங்கள் குடும்பத்தை சமாதானத்தினால் நிரப்பினார்.

தேவன் எங்கள் குடும்பத்திற்கு செய்த அற்புதத்தை மற்றவர்களுக்கும் அறிவிக்க வேண்டும் என்ற பாரமும், வாஞ்சையும் ஏற்படவே எனது வாழ்க்கை முழுவதையும் தேவனுக்கென்று அர்ப்பணித்தேன். பின்பு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ரூபகேடா கிராமத்தை மையமாக வைத்து ஊழியம் செய்யத் தொடங்கினேன். இங்கு ஆலயத்தில் தற்போது 35க்கும் அதிகமான குடும்பத்தார் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஆராதனை செய்து வருகின்றனர். எனது மனைவி ரத்துபேனுக்காகவும், 3 பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்து ஜெபம் செய்யுங்கள். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Jesus Redeems, Nalumavadi.**

## உங்கள் சகோதரனிடமிருந்து....



### *கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள். உங்கள் அனைவருடன் இந்த மாத இதழ் மூலமாக தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நாட்களில் நம்மில் அநேகர் தனிப்பட்ட முறையிலும் குடும்பமாகவும், சபையாகவும், குழுவாகவும் 40 நாட்கள் உபவாசித்து ஜெபித்து வேதத்தைத் தியானித்து பரிசுத்த வாழ்வுக்கு அர்ப்பணிப்பதிலும் செலவு செய்கிறோம். மட்டுமன்றி கிறிஸ்துவின் பாடுகளையும், கல்வாரி அன்பு, உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை போன்றவற்றைத் தியானிக்கிறோம். தேவன்தாமே உங்கள் யாவரையும் உன்னதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினால் நிரப்புவாராக

பீல் மக்கள் மத்தியில் அனைத்து ஷாலோம் சபைகளிலும் பெரும்பாலானா விசுவாசிகள் கடினமான கூலி வேலைகளைச் செய்து கொண்டு உபவாசித்து, தேவனைத் துதித்து, ஆராதித்து 40 நாட்கள் ஜெபித்து வருகிறார்கள். மட்டுமன்றி தங்கள் பிராந்தியம் முழுவதிலுமுள்ள, பீல் ஆதிவாசி ஜனங்கள் முழுவதும் இரட்சிக்கப்படவும் ஜெபிக்கிறார்கள். சபைகள் தோறும் தொடர்சங்கிலி ஜெபங்கள், சிறப்பு உபவாச கூடுகைகள் போன்றவற்றை ஆயத்தம் செய்து நடத்துகிறார்கள்.

குறிப்பாக ஞானஸ்நானத்திற்கு பல நூறு குடும்பங்கள் ஆயத்தப்பட்டு வருகிறார்கள். கிறிஸ்து பாடுபட்ட வாரத்தை நினைத்து ஆசரிக்கும் வாரத்தில் அனைத்து சபைகளிலும் ஆயத்தப்படுத்தப்பட்ட திரளான விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது. பெரிய வியாழனன்று இரவில் மிகப் பெரிய அளவில் கிறிஸ்துவின் கல்வாரி அன்பை ருசித்தவர்களாய் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவார்கள். சபைகள் தோறும் நடைபெற உள்ள குருத்தோலை ஞாயிறு, பெரிய வெள்ளி, உயிர்த்தெழுந்த திருநாள் சிறப்பு ஆராதனைகள் ஆசீர்வாதமாக அமைய ஜெபியுங்கள்.

தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படி என் மனைவி வஹிதா தேவதாஸ் அவர்களின் அன்பு தாயார் **திருமதி. கிரேஸ் அருள்ராஜ்** அவர்கள் தங்கள் 75ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். அவர்களைக் குறித்த சிறப்பு சாட்சி வெளியிடப்பட்டுள்ளது. எங்களுக்காக அல்ல, தேவநாமம் மகிமைப்படவும், அவர்களைப் போல் அநேக தாய்மார்கள் எழும்பவும், சபைகளும், தேசமும் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் வெளியிட்டுள்ளோம். வாசித்து தேவனைத் துதித்து மகிமைப்படுத்துங்கள். அல்லேலூயா!

தேவகிருபையால் ஜனவரி 26,27 நாட்களில் மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூரில் **பாஸ்டர். விஜய்** அவர்கள் மூலமாக B.S.S. ஸ்தாபனத்தின் அனைத்து சபைகள் மூலமாக நடத்தப்பட்ட சீஷத்துவ முகாமில் தேவனுடைய வாத்தையைப் பகிர்ந்துக் கொள்ள தேவன் கிருபைத் தந்தார். அனைவரையும் தேவன் வசனத்தின் மூலமாக, ஆவியின் அபிஷேகத்தால் தொட்டார்.

அநேகர் பரிசுத்த ஆவியில் நிறைந்து இரட்சிப்பின் அனுபவம், தெய்வீகம், விடுதலை போன்றவற்றைப் பெற்றார்கள். தேவன் நம் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக வட இந்தியாவில் உள்ள சபைகளையும், பிற ஊழியங்களையும் ஆசீர்வதிப்பதற்காக தேவனைத் துதியுங்கள்.

தேவ கிருபையால் பிப்ரவரி மாத ஊழியர்கள் கூடுகை, ஊழியக்காரிகள் கூடுகை மற்றும் மூன்று மாநிலங்களில் அனைத்து சபைகளில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை மூன்று இடங்களில் நடத்துவும் தேவன் கிருபைத் தந்தார். அனைத்து ஷாலோம் சபைகளிலும் சுகமளிக்கும் கூட்டங்களையும் உபவாச கூடுகைகளையும் அதிகமாகத் தேவன் ஆசீர்வதித்து உள்ளார்.

தேவகிருபையால் 04.02.2013 அன்று திங்கட்கிழமை Sharing Love Mission - Board Meeting –ம், தொடர்ந்து 05.02.2013 அன்று Shalom Charity Mission - Board Meeting –ம் தூத்துக்குடி, ஷாலோம் தலைமை அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. அனைத்து அறிக்கைகளும் வாசிக்கப்பட்டு தேவனைத் துதித்தோம். திட்டங்கள், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய அர்ப்பணிக்கப்பட்டது.

தொடர்ந்து மார்ச் மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். குறிப்பாக 12 இடங்களில் இன்னும் ஆலயக் கட்டுமானப் பணிகளின் (Roofing) கூரை அமைக்கும் பணியைச் செய்ய முடியாமல் உள்ளது. போதுமான நிதிஉதவி கிடைக்க ஜெபியுங்கள்.

ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் கல்விப்பணி மற்றும் மருத்துவம், குடிநீர் வசதி போன்றப் முன்னேற்ற பணிகளுக்காக ஜெபியுங்கள். தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், ஷாலோம் முன்னேற்றப் பணிகள், பணித்தளத்தில் நடைபெறும் முன்னேற்றத் திட்டப்பணிகள் ஆசீர்வதிக்கப்படவும், ஷாலோம் சபைகளில் எழுப்புதலின் அபிஷேகம் ஊற்றப்படவும் ஜெபியுங்கள்.

குறிப்பாக அடியேனுக்காக, மனைவி வஹிதாவுக்காக, பிள்ளைகளுக்காக, உடன் ஊழியர்களுக்காக, ஷாலோம் ஊழியங்கள் மூலமாக தேவ சித்தம் நிறைவேற்றப்பட, முழு பீல் மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

நாங்களும் குடும்பமாக, சபையாக உங்கள் யாவருக்காகவும் ஜெபித்து வருகிறோம். கர்த்தர்தாமே ஷாலோம் ஊழியத்தை ஜெபித்து தாங்கும் உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

**"... வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ... இதோ, உலத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்"** – இயேசு (மத்தேயு 28:18–20)

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**



# ¡± vÕ CúVÑ®u
# E«oj ùRÝkRYpXûU

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**"அவர் (இயேசு) இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்".** மத்தேயு 28:6 **"...கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளிலே உயிர்தெழுந்து..."** 1 கொரி.15:3,4

நம் ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்து அநேகருக்கு தரிசனமானார். தீர்க்கதரிசன நிறைவேறுதலும்; தம்மை குறித்து அவர் கூறின வார்த்தைகளும் மெய்யாகவே நடைபெற்றது. கிறிஸ்து உயிர்த்தெழுதுதல் அவர் தந்த தரிசனங்கள் மூலமாக உறுதியாகிறது என்பதை வேதத்தில் காண்கிறோம்.

★ முதலாவதாக மகதலேனா மரியாளுக்கு தம்மை வெளிப்படுத்தினார். (மாற்கு 16:9)
★ மற்ற ஸ்திரிகளுக்கும் இயேசு தாமே எதிர்பட்டு வாழ்க என்றார். (மத்தேயு 28:9)
★ எம்மாவூருக்குச் சென்ற இரு சீஷர்களுக்குத் தரிசனமானார். (லூக்கா 24:15)
★ பதினொரு சீடர்களுக்குத் தரிசனமானார். (லூக்கா 24:36)
★ பேதுருவுக்கு தம்மை வெளிப்படுத்தினார். (1 கொரி.15:5)
★ தோமா இல்லாத வேளையில் மற்ற சீடர்களுக்குத் தரிசனமானார். (யோவான் 20:26)
★ தோமாவுக்காக பிரத்தியேகமாகத் தரிசனமாகி தம்மை உயிருள்ளவராகக் காட்டினார். (யோவான் 20:26)
★ கலிலேயா கடற்கரையில் தம்மை வெளிப்படுத்தினார். (யோவான் 21:1)
★ ஐந்நூறு பேர்களுக்கு ஒரேவேளையில் தரிசனமானார். (1 கொரி.15:6)
★ கலிலேயாவின் மலையில் வைத்து சீஷர்களுக்கு வெளிப்பட்டார். (மத்தேயு 28:17)
★ யாக்கோபுக்கு தரிசனமானார். (1 கொரி.15:7)
★ கிறிஸ்து பரமேறும் வேளையில தரிசனமானார். (லூக்கா 24:50)
★ அப்போஸ்தலர் பவுல் மனம் திரும்பும் வேளையில் தரிசனமானார். (அப். 9:5)
★ ஸ்தேவானுக்கு அவன் மரணமடையும் வேளையில் தரிசனமானார். (அப். 7:55)

உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமையால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களை சற்று தியானிப்போம். முதலாவதாக **"அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்".** எபேசியர் 2:1 ; "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்". எபேசியர் 2:5 என்ற வசனங்களின்படி இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக, அக்கிரமங்களுக்காக நம் சாபங்களுக்காக அவர் சிலுவையில் ஜீவனைத் தந்தார். வேதவாக்கியத்தின்படி அவர் உயிர்த்தெழுந்தார். யோவான் 1:12ன் படி "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ,

அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்". தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்கிறார். பாவங்களை மன்னிக்கிறார். சாபங்களை நீக்குகிறார். விடுதலையையும், சமாதானத்தையும் கட்டளையிடுகிறார். நித்தியஜீவனை நமக்குத் தருகிறார். அந்த நித்திய ஜீவனில் இடம் பெற நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்".** 1 கொரி 15:20 "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்".1 கொரி. 15:22,23

கடந்த 20.01.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று என்னுடைய மனைவியின் தாயார் திருமதி. கிரேஸ் அருள்ராஜ் அவர்கள் 75ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். 4 வருடங்களுக்கு முன்பாக மிகவும் பலவீனப்பட்டு அவர்கள் படுக்கையில் இருக்கும்போது மரித்துவிடுவோம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் தேவன் ஒரு தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்தார். பரலோக வாசலில் ஒவ்வொருவரும் வரிசை வரிசையாக உள்ளே நுழைய காத்திருக்கிறார்கள். அப்போது என்னுடைய அத்தை அவர்கள் 4வது வரிசையில் இருந்தார்களாம். தேவதூதன் ஒருவன் வந்து 4வரிசை இன்னும் இருக்கிறது. ஆகவே நீங்கள் காத்திருக்க வேண்டாம். பின்பு வந்தால்போதும் என கூறினான். உடனே விழிப்பு வந்து நல்ல சுகத்துடன் எழும்பினார்கள். சரியாக 4 வருடங்கள் கழிந்து தேவன் அவர்களை அழைத்துக் கொண்டார். அவர்கள் நம்பிக்கையாக, உறுதியாக கூறினார். இன்னும் 4 வருடங்கள் கழித்து தேவன் என்னை எடுத்துக்கொள்வார். அதுதான் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை. நித்திய ஜீவனுக்கேற்ற நம்பிக்கை. அது மரணபயத்தை நீக்கும். ஒருநாள் இந்த அழிவுள்ள சரீரம் உயிர்ப்பிக்கப்படும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நாம் உயிர்ப்பிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையை இயேசு தருகிறார்.

மூன்றாவதாக அப்போஸ்தலர் மூன்றாம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரத்துக்கேறின பின்பு அப்போஸ்தலர்கள் மூலமாக நடந்த அற்புதங்கள். பேதுருவும் யோவானும் பிறவி சப்பாணியைப் பார்த்து **"வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட..."** என்று அற்புதத்தை நடத்தினார்கள். அப். 3:15,16 "ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது. உயிர்ந்தெழுந்த இயேசுவுக்கு சாட்சிகளாக இருக்கிறோம். அந்த உயிர்ந்தெழுந்த இயேசுவின் நாமமே சர்வாங்க சுகத்தைக் கொடுத்தது" என்று பிரசங்கித்தார்.

ரோமர். 4:17,24 சொல்லுகிறது, இயேசுகிறிஸ்துவின் மரித்தோரை உயிர்பிக்கும் வல்லமை அதாவது உயிர்த்தெழுந்த வல்லமை செத்துப்போன சரீரங்களையும் உயிர்ப்பிக்கிறது. நம் சரீர பலவீனங்கள், நோய்கள், நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை மாற்றி அமைக்கிறது. ஆபிரகாமைப் போல் நாம் விசுவாசிக்கும்போது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை நம் சரீரங்களை, ஆத்துமாவை உயிர்பிக்கும். அற்புதமான சர்வாங்க சுகத்தை நாம் பெற்றுக் கொள்வோம். இப்போதே விசுவாசத்துடன் ஜெபித்து தெய்வீக சுகத்தைப் பெற்றுக்கொள்வோம்.

நான்காவதாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை பயங்களை நீக்குகிறது. இயேசு கிறஸ்துவானவர் பாடுகளை அனுபவித்து கல்வாரி சிலுவையில் ஜீவனைத் தந்த வேளையில் சீஷர்கள் மிகவும் பயந்தார்கள். பதினொரு சீஷர்களும் கெத்சமனே தோட்டத்திலிருந்து ஓடிவிட்டார்கள். பேதுரு இயேசுவை வேலைக்காரிக்கும், சேவகர்களுக்கு முன்பாகவும் மறுதலித்து, சபித்து பின்வாங்கிவிட்டார். கிறிஸ்து மரித்தபின்பு சீஷர்கள் யாவரும் ரோம அரசாங்கத்திற்கு பயந்தார்கள். பூட்டிய கதவுகள் உள்ள அறையில் இருந்தார்கள். மரணபயம், அதிகாரங்களின் பயம், மனிதர்களைக் குறித்த பயம் சூழ்ந்து கொண்டது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து தரிசனமாகி தன்னை வெளிப்படுத்தியபின்பு பேதுருவும், சீஷர்களும் பெலப்பட்டார்கள், உயிர்த்தெழுந்த வல்லமை பெற்றவராய், ஓடிப்போன பேதுருவாக அல்ல அப்போஸ்தலர் 1:15 வாசித்து பாருங்கள் “அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று...” ஒரு தலைவராக எழும்பி பிரகாசிக்க கிறிஸ்துவுடன் உயிர்தெழுந்த வல்லமை உருவாக்குகிறது.

மேலும் வேலைகாரிக்கும், சேவகர்களுக்கும் பயந்த பேதுருவும், சீஷர்களும் உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமையினால் தைரியமாக பிரசங்கம் செய்தார்கள். அப். 4:1,7,8 வசனங்களை வாசித்துப்பாருங்கள். ஆசாரியர்கள், சேனைத்தலைவர்கள், பிரதான ஆசாரியர்கள் நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள் என்று கேட்டபோது, தைரியமாக பதில் கொடுத்தார்கள். பேதுருவையும், சீஷர்களையும் அடித்து சிறைச்சாலையில் போட்ட பொழுதிலும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை அவர்களுக்கு புதிய தைரியத்தைக் கொடுத்தது. வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்ன உயிர்த்தெழுந்த இயேசு கூட இருக்கிறார் என்ற தைரியம் அவர்களை நிற்கச் செய்தது. மரணபயமோ, மனுஷர் பயமோ, அதிகாரங்களின் பயமோ ஆட்கொள்ளவில்லை. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நாமும் கூட உயிர்த்தெழுந்த இயேசு நம்முடன் கூட இருக்கிறேன் என வாக்குக் கொடுத்தபடியால் எந்தக் காரியத்தைக் குறித்தும் பயப்படவேண்டாம். வாழ்க்கைப் பாதையிலும், ஊழியப்பாதையிலும் உயிர்த்தெழுந்த இயேசு நம்முடன் இருக்கிறார் என்ற தைரியத்துடன் முன்செல்வோம்.

கடைசியாக உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து வல்லமையால் அவருக்காக சாட்சிகளாய் விளங்கினார்கள். அப்போஸ்தலர் நடபடிகளில் உயிர்த்தெழுந்த இயேசு என்ற வார்த்தைகளைப் பல இடங்களில் வாசிக்கிறோம். **“...இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்”.** அப்.2:32

**“ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்”.** அப்.3:15 **“கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்”.** அப். 4:33 **“அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்”.** அப்.5:41,42

ஆதி அப்போஸ்தலர் நாட்களில் அப்போஸ்தலர்கள், சீஷர்கள், விசுவாசிகள் யாவருமே சுவிஷேசத்தை அறிவித்து, பிரசங்கித்து சாட்சியாய் ஜீவித்தார்கள். கிறிஸ்துவின் நாமத்தில் அவமானப்படுவதை பாக்கியமாகக் கருதினார்கள், பாடுகளை சகித்து, தங்கள் ஜீவனையே சுவிஷேசத்திற்காகக் கொடுக்க அர்ப்பணித்தார்கள்.

இந்த நூற்றாண்டில் வாழும் கிறிஸ்தவ சபைகள், விசுவாசிகளாகிய நாம் ஆதி அப்போஸ்தலர் ஜீவியத்தைப் போல் நாம் வாழ்கிறோமா? இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமையைப் பெற்ற நாம் நம் ஊழிய ஸ்தலங்களில் ஆத்தும ஆதாயம் செய்ய சுவிஷேசத்தை அறிவிப்போம். நாம் வாழ்கிற பகுதியில் கிறிஸ்து இயேசுவின் சாட்சிகளாய் ஜீவிப்போம். உயிர்த்தெழுந்த இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாவோம்! பாரததேசத்தை ஆயத்தப்படுத்துவோம்! **அல்லேலூயா!**

---




15.03.2013-ல் **பிறந்தநாள் காணும்**
சகோதரி **வஹிதா தேவதாஸ்** அவர்கள்



***சகோதரி வஹிதா தேவதாஸ்*** அவர்கள் தாயின் கர்ப்பத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பாத்திரம். இவர் ***சகோ. தேவதாஸ்*** அவர்களுக்கு தேவன் தந்த பரம தரிசனப்பணியான பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் மிஷனெரிப் பணியிலே ஒரு அப்போஸ்தலப் பணியை நிறைவேற்றுவதிலும், ஆயிரக்கணக்கான பீல் ஆதிவாசிக் குடும்பங்களுக்கும், சுமார் 500 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கும் ஆவிக்குரிய தாயாக அன்பையும், அரவணைப்பையும், ஆலோசனைகளையும், தேவனுடைய வழிநடத்துதல்களையும், தேவனுடைய வல்லமையையும் அறிவித்து நடத்திச் செல்லுகிற ஒரு அன்பு சகோதரியாவார்.

தேவன் இந்நாட்களில் தம் தீர்க்கதரிசன அபிஷேகத்தை அளவில்லாமல் இவர்கள் மேல் ஊற்றியிருக்கிறார். 15.03.2013 அன்று ***“பிறந்த நாள்”*** (15.03.1963) காணும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களை அந்நாளில் ஜெபித்து ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறோம். 50 வருடங்கள் கர்த்தரின் நாமத்தின் மகிமைக்காக வாழ்ந்து வருகிறார்கள்.

சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் தொலைபேசி எண் : 09376018006

**பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் நடைபெறும் மாநிலங்கள், மாவட்டங்கள், தாலுகாக்கள், சபைகள் மற்றும் ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்**

## குஜராத்

| வ. எண் | தாலுகா | மாவட்டம் | கிராமங்கள் | ஊழியர்கள் | சபைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜாலோத் | தாகோத் | 152 | 29 | 33 |
| 2. | தாகோத் | தாகோத் | 87 | 21 | 31 |
| 3. | கர்பாடா | தாகோத் | 34 | 9 | 13 |
| 4. | தான்பூர் | தாகோத் | 90 | 2 | 4 |
| 5. | ஃபத்தேபூரா | தாகோத் | 96 | 12 | 15 |
| 6. | லிம்கேடா | தாகோத் | 152 | 1 | 1 |
| 7. | சோட்டா உதய்ப்பூர் | பரோடா | 42 | 10 | 13 |
| 8. | கவாண்ட் | பரோடா | 46 | 2 | 3 |
| | | மொத்தம் | 699 | 86 | 113 |

## மத்தியப்பிரதேசம்

| வ. எண் | தாலுகா | மாவட்டம் | கிராமங்கள் | ஊழியர்கள் | சபைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜாபுவா | ஜாபுவா | 69 | 58 | 78 |
| 2. | மேக்நகர் | ஜாபுவா | 62 | 21 | 68 |
| 3. | தாந்லா | ஜாபுவா | 68 | 13 | 38 |
| 4. | பேட்லாவத் | ஜாபுவா | 77 | 3 | 9 |
| 5. | ராணாப்பூர் | ஜாபுவா | 48 | 15 | 27 |
| 6. | பாஜ்னா | ரத்லம் | 65 | 7 | 7 |
| 7. | ரத்லம் | ஜாபுவா | 98 | 5 | 5 |
| 8. | பாபரா | அலிராஜ்பூர் | 35 | 5 | 5 |
| 9 | ஜோபட் | அலிராஜ்பூர் | 39 | 5 | 8 |
| 10. | அலிராஜ்பூர் | அலிராஜ்பூர் | 54 | 5 | 8 |
| 11. | தார் | தார் | 53 | 4 | 5 |
| 12. | படுவாணி | படுவாணி | 203 | 13 | 13 |
| 13. | பிஜாவர் | சத்ரப்பூர் | 256 | 3 | 5 |
| | | மொத்தம் | 1127 | 157 | 276 |

## இராஜஸ்தான்

| வ. எண் | தாலுகா | மாவட்டம் | கிராமங்கள் | ஊழியர்கள் | சபைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | குசல்கட் | பான்ஸ்வாடா | 394 | 147 | 160 |
| 2. | பாகிதோரா | பான்ஸ்வாடா | 294 | 38 | 45 |
| 3. | பான்ஸ்வாடா | பான்ஸ்வாடா | 306 | 16 | 18 |
| 4. | கடி | பான்ஸ்வாடா | 168 | 11 | 13 |
| 5. | காட்டோல் | பான்ஸ்வாடா | 314 | 5 | 5 |
| 6. | அர்நோத் | பிரத்தாப்கட் | 170 | 12 | 15 |
| 7. | கேர்வாடா | உதய்ப்பூர் | 180 | 3 | 4 |
| | | மொத்தம் | 1826 | 232 | 260 |

மாநிலங்கள் – 3 மாவட்டங்கள் – 11

தாலுகாக்கள் – 28 கிராமங்கள் – 3657

மூன்று மாநிலங்களிலும் சபைகள் எழுப்பப்பட்ட கிராமங்கள் 649

---

மூன்று மாநிலங்களிலும் எழுப்பப்பட்ட சுதேச ஊழியர்கள் 475

பணித்தள, Project, பயிற்சியில் உள்ள ஊழியர்கள் 102

**மொத்த ஷாலோம் ஊழியர்கள் 572**

---



*24.03.2013 அன்று பிறந்த நாள் காணும்*

**சகோதரி ஷெக்கினா**

ரஷ்யாவில் 3ம் ஆண்டு மருத்துவப் படிப்பு படித்துவரும்
எங்களது அன்பு மகளை அந்த நாளில் ஜெபித்து
ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறோம்.

***Rt. Rev. Dr. V. Devadass & Family,***
***Shalom Pastors & Bhil Evangelists***
***Field & Head Office Staff of Shalom***

# CBC (VBS)
# சிறுவர் வேதாகம வகுப்பு - 2013


பிரியமானவர்களே, நமது ஷாலோம் பணித்தளங்களிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவைத் தந்து வருகிறார். மேலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்த சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு அன்றும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேதப் பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்த பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2012ஆம் ஆண்டில் **"எனது அழகான இருதயம்"** என்ற தலைப்பில் 30000 சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளை சந்தித்து வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் **"என் நண்பன் – இயேசு"** என்கிற தலைப்பில் 30000 சிறுவர்களுக்கு 600 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கையேடுகள், 30000 CBC புத்தகங்கள், Badge. (30000), பாட்டுப் புத்தகங்கள் (10,000), கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்றபொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா **ரூ. 10/– வீதம் 30000 மாணவர்களுக்கு ரூ. 3 இலட்சம்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ **ஒரு மாணவருக்கு ரூ. 10/– வீதம்** உங்களால் முடிந்த அளவிலான மாணவர்களுக்குக் கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

**தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின்**
**பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!**



CBC பயிற்சி புத்தகங்கள்

**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்;"**
மத்தேயு 19:14

## சபை உருவாக்கும் (T3) ஊழியர்களுக்கான சிறப்பு சீஷத்துவ பயிற்சி முகாம்கள்

முதலாவது கடந்த 01–02–2013 அன்று குஜராத்திலுள்ள பீல் இனத்தைச் சார்ந்த நம் இளம் ஊழியர்களுக்கும், அங்குள்ள சபைகளின் மூப்பர்களுக்கும் பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் 74 இளம் ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு ஷாலோம் ஊழியர் **பாவ்சிங் கட்டாரா** பயிற்சி வகுப்புகளை நடத்தினார்கள்.

இரண்டாவது முகாம் பிப்ரவரி 2ம் தேதி மத்தியப்பிரதேசத்தில் நடந்தது. முகாமில் 121க்கும் மேற்பட்ட இளம் ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு ஷாலோம் சுதேச ஊழியர் **தூம்சிங் பாரியா** பயிற்சி வகுப்புகள் நடத்தினார்கள்.

மூன்றாவது முகாம் பிப்ரவரி 4ம் தேதி இராஜஸ்தான் மாநிலம் செவன்யா என்ற இடத்தில் வைத்து இளம் ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கு இந்த முகாம் நடந்தது. முகாமில் 104 பேர்கள் கலந்து கொண்டனர். ஷாலோம் ஊழியர்கள் **அனில் சௌகான், விகாஸ் கராசியா, பாதர் பாரியா** ஆகியோர் பயிற்சிகளைக் கொடுத்தார்கள். மேற்கண்ட பயிற்சி முகாம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை முறையே நடைபெற்றது. மேலும் 6 பிரிவாக பயிற்சிகள் கொடுக்கப்படடது. **சபை என்றால் என்ன? விசுவாசிகள், ஊழியர்கள், ஆயர்கள்** போன்றவற்றிற்கான விளக்கங்கள் குறித்து பயிற்சி கொடுக்கப்பட்டது. மேலும் ஆத்தும ஆதாயப்பணியை எப்படி செய்வது என்றும் பயிற்சி கொடுக்கப்பட்டது.

இந்த பயிற்சியில் பங்கு பெற்றவர்கள் பல ஊர்களிலிருந்தும் கடந்து வந்ததால் அவர்களுக்கு நாம் மதிய உணவும் பயணச் செலவுக்கான பணமும் கொடுக்கப்பட்டது. இதில் பயிற்சிபெற்ற இளம் ஊழியர்களும் மூப்பர்களும் தங்களின் சபைகளிலுள்ள விசுவாசிகளுக்குப் பயிற்சி அளிப்பார்கள். விசுவாசிகள் குறைந்தது 5 பேருக்காவது சுவிசேஷம் அறிவிக்கவேண்டும். மேற்கண்ட பயிற்சி முகாம்கள் யாவும் **சகோ. ஜெயராஜ்** மற்றும் **சகோ. கேரட்** அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது.

இந்த T3 என அழைக்கப்படும் பயிற்சி முகாம்களை நடத்த உதவிய Bless India- Vision 2020–ன் தலைவர் **Dr. எமில் ஜெபசிங்** அவர்களுக்கு எங்கள் ஊழியத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ***தேவனுக்கே மகிமை உண்டாவதாக!***



ஆராதனை வேளை



பயிற்சியின் போது



குழு கலந்தாய்வு

# ஞாயிறுப் பள்ளி ஆசிரியர் முகாம்கள்




***Sunday School Teachers Training***

சிறு பிள்ளைகள் எதிர்காலத்தில் சபைகளின் தூண்கள். எனவே அவர்களை இப்போது இருந்தே ஆவிக்குரியவர்களாக உருவாக்கி வர வேண்டும் என்ற நோக்கத்தோடு அனைத்து ஷாலோம் சபைகளிலும் ஞாயிறுப் பள்ளியை திறம்பட நடத்துவதற்கென்று எல்லா சபைகளிலும் ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு முறையான பயிற்சி குஜராத்திலுள்ள தாகோத்தில் வைத்து நடத்தப்பட்டது. 19.01.2013–ல் குஜராத்திலுள்ள ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 20.01.2013–ல் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 27.01.2013–ல் இராஜஸ்தானிலும் ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்களுக்கு முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்களில் மொத்தம் 304 பேர் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட முகாம்களில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் இயேசுவைப்போல் என்ற தலைப்பில் தேவ செய்திகளைக் கொடுத்து, ஆவியிலே நிறைந்து ஜெபம் நடத்தினார்கள். பலரும் அபிஷேகத்தில் நிறைந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். **சகோ. ஃப்ராங்க்ளின்** அவர்கள் ஆராதனை மற்றும் செய்கைப் பாடல்களை நடத்தினார்கள். ஞாயிறுப்பள்ளியின் பயிற்சியை **சகோ. பாவ்சிங் கட்டாரா** அவர்கள் கொடுத்தார்கள்.

ஒவ்வொரு வாரமும் நடத்தக்கூடிய பாடத்திற்குரிய கதைகள், பாடல்கள், ஆகியவைகள் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு சபைக்கும் தனித்தனியாக வருகைப் பதிவேடும், காணிக்கைப்பெட்டியும் கொடுக்கப்பட்டது. இந்த பயிற்சியின் போது ஞாயிறு பள்ளிக்கு வரும் பிள்ளைகள் இதன் மூலம் ஏற்பட்ட நல்ல மாற்றங்கள் மற்றும் பாவ பழக்கங்களிலிருந்து பெற்ற விடுதலைகள் போன்ற சாட்சிகளை பகிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். அநேகர் இந்த முகாமில் தங்களை அர்ப்பணித்தார்கள். முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவும், இரவு உணவும் வழங்கப்பட்டது. தொலைதூரங்களிலிருந்து அனைவரும் வந்ததினால் அனைவருக்கும் பயணச் செலவு வழங்கப்பட்டது.

ஒவ்வொரு சபைகளிலும் ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் கிடைப்பது கடினம். 10வது, 12வது படிக்கும் மாணவ மாணவியர்களை தெரிந்தெடுத்து 52 வாரங்களுக்கான பாடங்களை பயிற்சி கொடுத்து அனுப்பப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆசிரியருக்கும் மாதம் ரூ.200/–வீதம் ஊக்கதொகை வழங்கப்படுகிறது. அதன்மூலமாக அவர்கள் படிப்பிற்கு அது உதவியாகவும் ஆசீர்வாதமாகவும் அமைகிறது. நீங்களும் ஒரு சபை ஓய்வுநாள் பாடசாலையை ஆசீர்வதிக்க விரும்பினால் ஊக்கதொகை மற்றும் பயிற்சிக்கான செலவு மாதம் ரூ. 300/– ஜெபத்துடன் அனுப்பி தாங்க முன்வரலாம். சிறுவர்களே, வாலிபர்களே, சபையில் ஓய்வுநாள் பள்ளி கூட ஊழியங்களை தாங்க அன்புடன் அழைக்கிறோம்.



# பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான கல்விப் பணியில் ...

*தொகுப்பு :* ***Rev. S. சந்திர குமார்,*** *தூத்துக்குடி*

இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்தில் பிஜல்பூர் பகுதியிலுள்ள பல கிராமங்களில் ஏழை பிள்ளைகளுக்குப் படிப்பதற்கு சரியான வசதிகளுடன் பள்ளிக்கூடங்களே இல்லை. 3 அல்லது 4 கிலோ மீட்டர் தொலைவில் அப்படியே பள்ளிக்கூடம் இருந்தாலும் ஆசிரியர்கள் சரியாக வருவதில்லை. இந்நிலையில் தரித்திரத்தில் வாடும் பீல் இன மக்களின் படிப்பு கேள்விகுறியாக இருந்த சூழ்நிலையில் குறிப்பாக நம் ஷாலோம் ஊழியர்களின் பிள்ளைகள் மற்றும் விசுவாசிகளுக்கென்று நமது ஷாலோம் மிஷனின் மூலமாக 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்புவரை பள்ளிக்கூடம் கட்டப்பட்டு ஆண் பிள்ளைகள் தங்குவதற்கும், பெண் பிள்ளைகள் தங்குவதற்கும் தனித்தனியான விடுதி வசதியும் செய்யப்பட்டுள்ளது. பள்ளியில் மாணவர்களுக்கு போதிய ஆசிரியர்கள் இருபாலரும் நியமிக்கப்பட்டு பள்ளி நன்கு செயல்படுகிறது.

இந்தப் பள்ளி 2005ஆம் ஆண்டில் 16 பிள்ளைகளுடன் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்தில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை மட்டுமே இருந்தது. 2010–ல் 8ஆம் வகுப்பு வரை தொடங்கப்பட்டுள்ளது. 8ஆம் வகுப்பு இங்கு தொடங்கும்முன் இங்கு படித்த பிள்ளைகளில் சுமார் 200 பேர்கள் 5 ஆம் வகுப்பு வரை முடித்துவிட்டு வேறு பள்ளியில் சேர்ந்து படிக்கிறார்கள். தற்போது 8ஆம் வகுப்புவரை இங்கு இருப்பதால் 8ஆம் வகுப்புவரை தொடர்ந்து படிக்கும் வாய்ப்பு உள்ளது. தற்போது இங்கு படிக்கும் மொத்தபிள்ளைகள் 308. இந்த பிள்ளைகளில் 182 பிள்ளைகள் விடுதியில் தங்கியும், மீதமுள்ளவர்கள் வீட்டிலிருந்து வந்தும் படிக்கிறார்கள். இந்த பிள்ளைகள் அனைவரும் மிக பொருளாதார நிலையில் குறைவுள்ளவர்களே.

இங்கு ஒருவேளை ஷாலோம் மிஷனின் மூலமாக இந்த பள்ளிக்கூடம் உருவாகவில்லையென்றால் கண்டிப்பாக இங்கு படிக்கும் பிள்ளைகளில் பலர் படிப்பை இழக்கவேண்டிய சூழ்நிலைதான். ஆனால் தேவன் நமது மிஷன் மூலமாக இந்த பீல் இன மாணவர்களுக்குப் படிப்பைக் கொடுக்கின்றார். இங்கு படிக்கும் மொத்த பிள்ளைகளில் அநேக பிள்ளைகள் நமது சுதேச ஊழியர்களின் பிள்ளைகள்.

விடுதியில் படிக்கும் 182 பிள்ளைகளுக்கும் நமது **ஷாலோம் சேரிட்டி மிஷன்** மூலமாக உணவு வழங்கப்படுகிறது. இவர்களுக்கு பேனா முதல் நோட்டு, புத்தகங்கள் மற்றும் விடுதியில் படுக்க பாய், பெட்ஷீட் போன்றவைகள் வரை கொடுக்கப்பட்டும், நன்கு பராமரிக்கப்பட்டும் வருகிறார்கள். பெண் பிள்ளைகளுக்கு மட்டும் Toilet வசதி உள்ளது. நம் ஊழியத்தில் இதற்கென்று அநேகத் தேவைகள் இருப்பதால் மிகவும் பொருளாதார சிரமத்தின் மத்தியில் இந்த பள்ளியும், விடுதியும் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளியும் விடுதியும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது.

இங்கு பயிற்றுவிக்கும் ஆண் பெண் ஆசிரியர்களுக்கு நம்மால் ஒரு சிறிய சம்பளம் மட்டுமே தரமுடிகிறது. விடுதியில் படிக்கும் பிள்ளைகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டாலும் அவர்களை மருத்துவரிடம் அழைத்துச் சென்று கவனிக்கப்படுகிறார்கள். இந்த விடுதியில் காப்பாளர்கள் மற்றும் சமையல் காரர்கள் பணிபுரிகிறார்கள்.

பள்ளிக்கும் விடுதிக்கும் பொறுப்பு வகிக்கும் முதல்வராக திரு. நாத்துபாய் டின்டோடு அவர்கள் பணிபுரிகிறார்கள். அவர்கள் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு கல்லூரியில் படித்து முடித்து வேலை ஏதும் கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டு கொண்டு இருந்த வேளையிலே இவருக்குத் தீராத வயிற்றுவலி வேறு வாட்டியெடுத்தது.

இந்நிலையில் மிகவும் துக்கமடைந்த இவரை ஒரு அம்மா சபைக்கு வரும்படியாக அடிக்கடி கூறியிருக்கிறார்கள். தேவன் வயிற்றுவலியில் இருந்து விடுதலை தந்து வேலையும் தருவார் என்று அந்த விசுவாசி அம்மா இவரிடம் அடிக்கடி கூறுவார்களாம். கடைசியாக தாட்கா என்ற இடத்தியிலுள்ள ஷாலோம் சுதேச ஊழியர் பத்யா கராசியா அவர்களின் சபைக்கு சென்று வெள்ளிக்கிழமைக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபிக்கவே தேவன் வயிற்றுவலியிலிருந்து இவருக்குப் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். மேலும் இவர் B.Ed படிக்கத் தேவன் உதவி செய்தார்.

2001ஆம் ஆண்டு பெங்களூரில் பாஸ்டர். பால்தங்கையாவின் சபைக்கு நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் கூடுகையில் செல்லும்போது இவரும் சென்று ஜெபத்தில் கலந்து கொண்டார். அப்போதுதான் இவர் முழுநேர ஊழியத்திற்கு வரவேண்டுமென்று தேவன் பேசினாராம். அதன்பின்பு முழுநேர ஊழியராக இவர் சேர்ந்துவிட்டார். இவர் தமது கிராமத்தை சுற்றிலும் 15 சபைகளை எழுப்பியுள்ளார். சிறுவர் ஊழியமும் செய்கிறார். நமது பள்ளிக்கு முதல்வராகவும் சகோ. நாத்து டின்டோர் பணியாற்றுகிறார்.

இங்கு படிக்கும் ஒருசில பிள்ளைகளிடம் பேட்டி நடத்தியபோது கீழ்க்கண்ட பிள்ளைகள் நமது பள்ளி மற்றும் விடுதியைப் பற்றி கூறியது மகிழ்ச்சியாக இருந்தது.

**தீபிகா கராசியா (8ஆம் வகுப்பு)**

நான் 1ஆம் வகுப்பிலிருந்து இங்கு படிக்கிறேன். தற்போது 8ஆம் வகுப்பு படிக்கிறேன். எனது அப்பா பெயர் தூள்ளா கராசியா. ஷாலோம் மிஷனில் ஊழியராக செயல்பட்டு வருகிறார். எங்களது ஊரிலே பள்ளிக்கூடம் இல்லை. மூன்று கிலோ மீட்டருக்கு அடுத்து அரசு பள்ளி உள்ளது. ஆனால் அந்த பள்ளியில் ஆசிரியர்கள் யாரும் இல்லை. ஷாலோம் பள்ளி இங்கு இல்லையென்றால் நான் எனது படிப்பை பல வருடங்களுக்கு முன்னே நிறுத்த வேண்டியதாய் இருந்திருக்கும். இங்கு நான் விடுதியில் தங்கிப் படிக்கிறேன். இந்த பள்ளியில் வேதவசனங்களையும் எங்களுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள். நான் படித்து முடித்து ஒரு நர்ஸ் ஆகப் பணியாற்றி இந்த பள்ளிக்கும் பல கிராமங்களுக்கும் உதவி செய்வேன்.



**ஷெக்கினா கராசியா (8ஆம் வகுப்பு) :**



எனது சொந்த ஊர் போர்குண்டா. நான் 1ஆம் வகுப்பிலிருந்து இங்கு படிக்கிறேன். தற்போது 8ஆம் வகுப்பு படிக்கிறேன். எங்களது ஊரிலே பள்ளிக்கூடம் இல்லை. வெகுதூரத்தில் இராஜஸ்தான் அரசு பள்ளிக்கூடம் இருந்தாலும் அந்த பள்ளிகளில் படிப்பு சரியில்லை. நமது ஷாலோம் பள்ளி தொடங்கவில்லையென்றால் நிச்சயமாக நான் படிக்க வாய்ப்பே இல்லை. இங்கு ஆசிரியர்கள் நன்கு பாடங்களை நடத்துகிறார்கள். விடுதியிலே எங்களுக்குத் தேவையான உணவும், தேவையான வசதிகளும் உள்ளன. எனது பெற்றோரகள் ஷாலோம் மிஷனில் ஊழியம் செய்து வருகிறார்கள். ஷாலோம் ஊழியங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். நான் எதிர்காலத்தில் ஒரு டாக்டராக வந்து இந்த பள்ளியில் உள்ள எல்லா பிள்ளைகளுக்கும் இலவசமாக உதவிகள் செய்வேன். எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**ரமேஷ் நினாமா (8ஆம் வகுப்பு)**



நான் இரண்டாம் வகுப்பிலேயே இங்கு சேர்ந்து தற்போது 8ஆம் வகுப்பு படிக்கிறேன். என் அப்பாவின் பெயர் ரூப்சிங் நினாமா. எனது பெற்றோர் விவசாயம் செய்து வருகிறார்கள். நாங்கள் பாஸ்டர் கெபிலால் கராசியா அவர்களின் சபை விசுவாசிகள். எங்களது ஊரிலே பள்ளிக்கூடம் இல்லாததால் நான் இங்கு வந்து விடுதியில் தங்கிப் படிக்கிறேன். நான் எதிர்காலத்தில் கம்ப்யூட்டர் எஞ்சினியராக வந்து இந்த பள்ளிக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன்.

**ஜிந்தேந்தரா நினாமா (8ஆம் வகுப்பு)**



எனது சொந்தஊர் சாகுவா. எனது அப்பா பெயர் துல்ஜி நினாமா. என் பெற்றோர் ஷாலோம் சபையிலே ஊழியம் செய்கிறார்கள். நான் இரண்டாம் வகுப்பு முதல் இந்த பள்ளியில் படித்து வருகிறேன். தற்போது 8ஆம் வகுப்பு படிக்கிறேன். எங்கள் ஊரில் பள்ளிக்கூடமே இல்லை. வெகுதூரத்தில் பள்ளி இருப்பதாலும் அங்கு ஆசிரியர்கள் இல்லாததாலும் நான் இங்கு படிக்கிறேன். எங்களுக்கு இந்த பள்ளிக்கூடத்தில் நன்கு கற்றுக் கொடுக்கின்றார்கள். நான் எதிர்காலத்தில் ஒரு டாக்டராக வந்து இந்த கிராமத்தில் ஏழை மக்களுக்காக சேவை செய்வேன்.

நாம் நடத்திவரும் பள்ளிக்கூடம் மற்றும் விடுதிக்காக ஜெபிக்கவேண்டும். நிறையத் தேவைகள் உள்ளது. இந்த பள்ளியில் படிக்கும் பீல் இனப் பிள்ளைகளுக்கு தேவனால் ஏவப்பட்டவர்கள் ஆதரவு அளிக்கலாம். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்று வேதம் சொல்லுகிறது. இந்த ஆதிவாசி மாணவர்களுக்கு ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக மாதம் ரூ.600/– ஜெபித்து கொடுக்க உதவி செய்ய முன்வருபவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். மேலும் உயர்கல்வி +2 மற்றும் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு வருடம் ரூ.10,000/– வீதம் 4 வருடங்களுக்கு தாங்க முன்வரும் சிறப்பு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறது. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# ஷாலோம் நடுநிலைப் பள்ளி & ஹாஸ்டல்
# மாணவர் மற்றும் மாணவியர்



பாட புத்தகங்களுடன் மாணவர்கள்



ஆர்வத்துடன் கற்கும் மாணவிகள்



உணவு வேளையில் மாணவர்கள்



# ஷாலோம் செயற்குழுக் கூட்டம் - 4-2-2013




நிகழ்ச்சித் தொகுப்பு : Prof. C.S. கிறிஸ்டோபர்




ஊழியப் பகிர்வு : பிஷப். V. தேவதாஸ்



பணித்தளப் பகிர்வு : சகோதரி வஹிதா தேவதாஸ்



வரவேற்புரை – சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்



நிதிநிலை அறிக்கை – சகோ. பிரேம் குமார் அவர்கள்



ஆலோசனை வழங்கும் சகோ. சுந்தர்ராஜ் அவர்கள்



முன்னேற்றப் பணி ஆலோசனை – சகோ. சுதந்திரசிங் அவர்கள்



ஜெபவேளை – சகோ. ஜார்ஜ் அவர்கள்

## ஊழியர்களின் மனைவிமார்களுக்கான புது வருட சிறப்புக் கூடுகை



செய்திவேளை : சகோதரி வஹிதா தேவதாஸ்



கலந்து கொண்ட ஊழியர்களின் மனைவிமார்






தேவன் எழுப்பிய சாட்கள்

## ஞாயிறுப் பள்ளி ஆசிரியர் முகாம்கள்




செய்திவேளை : சகோதரி வஹிதா தேவதாஸ்



பாடல் மற்றும் ஆராதனை வேளை





கலந்து கொண்ட ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்கள்

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்
அவர் பார்வைக்கு அருமையானது. சங். 116 :15



# வெண்ணங்கி தரித்தோர் வரிசையில்

## திருமதி. கிரேஸ் அருள்ராஜ்

**(சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் தாயார்)**

**தோற்றம் : 25.06.1937** **மறைவு : 20.01.2013**

திரு. மோசஸ் மற்றும் திருமதி. மார்த்தாள் மோசஸ் (நாசரேத்) அவர்களின் புதல்வியும், திரு. அருள்ராஜ் (தூத்துக்குடி) அவர்களின் மனைவியுமான **திருமதி. கிரேஸ் அருள்ராஜ்** (Retd. Teacher) வயது 76 அவர்கள் 20.01.2013 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்களை பற்றி சில காரியங்களைத் தேவ நாம மகிமைக்காக சாட்சியாக எழுதுகிறோம்.

எனது தாயார் இளம் வயதிலேயே தன் தகப்பனை இழந்து, மிகுந்த கஷ்டப்பட்டு வாழ்ந்த சூழ்நிலையிலும் ஜெபிக்கிற, தாயின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து 1960ஆம் ஆண்டு திரு. அருள்ராஜ் (43 வயது), திருமதி. கிரேஸ் அருள்ராஜ் (வயது 21) திருமணம் பாளையங்கோட்டை கதீட்ரல் ஆலயத்தில் நடைபெற்றது. எனது தகப்பனார் Military-யில் இருந்து ஓய்வுபெற்று வந்து ஆறுமுகநேரியில் உள்ள DCW கம்பெனியில் பணியாற்றினார்கள். கர்த்தர் இவர்களுக்கு 5 பிள்ளைகளை கொடுத்தார். மூத்த மகளாக திருமதி. வஹிதா தேவதாஸ் (ஷாலோம், குஜராத்), இரண்டாவது மகளாக திருமதி. பியூலா குரூஸ் (Jesus the Restorer Ministry), மூன்றாவது மகனாக திரு. ஹேம்ராஜ் (Govt. Hr.Sec. School, Suthamlli), நான்காவது மகனாக திரு. அமிர்தராஜ் மோசஸ் (DCW, Arumuganeri), ஐந்தாவது மகளாக திருமதி. சேபா இம்மானுவேல் பால் (IMS Missionary-West Bengal)

எனது தகப்பனார் DCW பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்பு வேடப்பட்டி (நாகலாபுரம்) கிராமத்தில் தீப்பெட்டி தொழிற்சாலை ஆரம்பித்து 2 வருடங்கள் நடந்தது. பின்பு அந்த தொழிலில் நஷ்டம் ஏற்பட்டபோது, எனது தகப்பனார் வியாதிப்பட்டார். மருத்துவம் செய்தும், பலனில்லாமல் படுத்த படுக்கையிலேயே இருந்தார்கள். தீப்பெட்டி தொழிற்சாலையும் மூடப்பட்டது. தூத்துக்குடியில் இருந்த சொந்த வீட்டை இழந்தோம். வருமானம் எதுவும் கிடையாது. எனது தாயார் ஆறுமுகநேரியில் இந்து நடுநிலைபள்ளியில் தையல் ஆசிரியராக மிகவும் குறைவான ஊதியத்தில் பணிசெய்து வந்தார்கள். அப்பொது நான் கல்லூரியில் B.Sc 2ம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். எனக்குப் பின் 2 தங்கையும், 2 தம்பியும் கல்வி பயின்று கொண்டிருந்தார்கள். எப்படி குடும்பத்தை நடத்துவது? எப்படி பிள்ளைகளைப் படிக்க வைப்பது? பெரிய கேள்விகுறியான இக்கட்டான சூழ்நிலை.

ஆனால் தேவன் எங்களோடு கூட இருந்தார். முதலாவதாக எனது தாயார் ஜெபிக்கிறஒரு ஜெப வீராங்கனை. ஜெபத்தினால் எதையும் சாதிக்கலாம் என்று நன்கு அறிந்திருந்தபடியால், எல்லாம் கைவிடப்பட்ட நிலைமையிலும் இயேசுவை இறுகப் பிடித்து கொண்டார்கள். தினமும் ஆலயத்திற்கு சென்று எல்லா கவலைகளையும், தேவைகளையும் இயேசுவிடம் மட்டுமே அழுது, அழுது ஜெபிக்கிற வழக்கம் இருந்தது.

மனிதரை நம்புவதைப் பார்க்கிலும் தேவனிடத்தில் பற்றுதலாய் இருப்பதே நலம் என்ற வசனத்தின்படி நடந்தார்கள். இப்பொழுதும் எங்களுக்காகவும், பேரப்பிள்ளைகளின் பெயரைச் சொல்லியும் மூன்று வேளை ஜெபித்து தாங்கி வந்தார்கள். ஜெபமே ஜெயம் என்பதை தன் வாழ்க்கையில் காட்டினார்கள். இரண்டாவதாக எனது தாயார் விசுவாசப் பெண்மணி. எப்பொழுதும் தேவைகளை இயேசுவிடம் கூறிவிட்டால் நிச்சயம் அவர் நடத்துவார் என்றும், கூப்பிடுகிற காக்கை குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறவர் நம்மையும் போஷிப்பார் என்ற அசையாத நம்பிக்கையில் இருந்து எங்களை வளர்த்தார்கள். எல்லாரையும் படிக்க வைத்தார்கள் **"ஏற்ற காலத்தில் அவர் நம்மை உயர்த்துவார்"** என்ற விசுவாசத்துடன் வாழ்ந்தார்கள். மூன்றாவதாக, எனது தாயார் சிங்கத்தைப் போன்ற தைரியம் படைத்தவர்கள். எதற்கும் அஞ்சுவதில்லை. மிகுந்த தைரியமாய் எங்களை வளர்த்தார்கள். எதையும் ஆண்டவரை முன்வைத்து சாதிக்கும் திறமை படைத்தவர்கள். முழு குடும்பப் பொறுப்பையும் தாமே ஏற்று **"ஒரு தாய் தேற்றுவது போல" "ஒரு தகப்பன் சுமப்பது போல"** என்ற வார்த்தையின்படியே தாயும் தகப்பனுமாய் இருந்து பிள்ளைகளை பராமரித்து வளர்த்தார்கள்.

நான்காவதாக, மிகுந்த கண்டிப்பானவர்கள். பிள்ளைகளை வளர்ப்பதில் மிகுந்த கண்டிப்பானவர்கள். ஆலயம் ஒழுங்காக செல்லவேண்டும், வேதவாசிப்பு, ஜெபம், ஞாயிறுபள்ளி, விடுமுறை வேதாகமப் பள்ளி மற்றும் வாலிபர் முகாம், கூட்டங்கள், ஜெபங்கள், உபவாசங்கள், கன்வென்ஷன், சுவிஷேச ஊழியம் எல்லாம் நாங்கள் கண்டிப்பாகப் பங்குபெற வேண்டும் என்று அறிவுறுத்துவார்கள். வீட்டை விட்டு வெளியே சென்றால் மாலை 6 மணிக்குள் வீட்டிற்கு வந்து விடவேண்டும். தினமும் இரவு ஆலயம் செல்ல வேண்டும். இப்படியாக எல்லாவிதத்திலும் கண்டிப்புடன் வளர்த்தார்கள்.

ஐந்தாவதாக, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள். எனது பாட்டியம்மா மார்த்தாள் மோசஸ் அவர்கள் நான் எனது தாயாரின் வயிற்றில் இருக்கும் போதே தரிசனம் பார்த்து உன் தேசம் எப்சிபா என்றும், பியூலா என்றும் அழைக்கப்படும் என்று எனது தாயாரிடம் தீர்க்கத் தரிசனமாகக் கூறி, உன் பிள்ளைகள் ஊழியம் செய்வார்கள் என்று சொன்ன அந்த வார்த்தையின்படியே, எங்கள் வீட்டில் மூன்று பெண்களும் முழுநேர ஊழியம் செய்து வருகிறோம். எனது தம்பி **ஹேம் ராஜ்** அவர்களும் வாலிப பிராயத்திலிருந்தே ஊழியம் செய்தும், ஆலய காரியங்களிலும் பொறுப்பாய் செயல்பட்டு வருகிறார். இளைய தம்பி **மோசஸ்** அவர்களும் ஊழியத்தின் காரியங்களிலும், ஆலய காரியங்களிலும் மிகவும் உற்சாகமாய் செயல்படுவார்கள்.

நான் Telephone Operator Course முடித்து எனக்கு வேலை கிடைத்த நேரத்தில்தான், ஊழிய அழைப்பும் (IMS Missionary, Orissa) கிடைத்தது. அப்பொழுது தாயார் தனியாக குடும்பத்தை நடத்துவது கடினமாக இருந்தபடியால், எனக்கு வேலை கிடைத்தால் குடும்பத்தை சுலபமாக நடத்தலாம் மற்றும் தம்பி, தங்கைகளைப் படிக்க வைக்கலாம் என்று நினைத்த

வேளையில் ஊழிய அழைப்பும் ஒரே நேரத்தில் வந்தது. என்ன செய்வது? Telephone Operator வேலைக்கு சென்றால் ரூ. 2000/– ஊதியம் கிடைக்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் IMS Missionary ஆக ஒரிசா சென்றால் ரூ.200/– கிடைக்கும் என்று கூறினார்கள். அப்பொழுது எனது தாயார் ஜெபித்து, மகளே, நீ ஊழியத்திற்கே போ! என்று கூறி ஜெபித்து ஆசீர்வதித்து அனுப்பினார்கள். தனது மூத்த மகளை தூர இடத்திற்கு மிஷனெரியாக அர்ப்பணித்தார்கள். மட்டுமல்லாமல் எந்த கஷ்டமானாலும் முன் வைத்த காலை பின் வைக்க கூடாதென்றும், தேவன் உன்னோடு கூட இருப்பார் என்று ஆறுதல் கூறி அனுப்பினார்கள். அந்த வார்த்தை தான் என்னை ஊழியத்தில் நிலை நிற்க செய்தது. இந்தியாவில் ஒரு ஜாதி மக்களுக்கு ஆசீர்வாதமாக எங்களை தேவன் பயன்படுத்தி வருகிறார். பின்பு எனது தங்கை **பியூலாவையும்** சென்னையில் சிறுவர் ஊழியம் செய்யும்படியாக அனுப்பி வைத்தார்கள். பின்பு பாலியர் நேசனிலும் ஊழியம் செய்து, தற்போது இயேசுவே மீட்பர் ஊழியங்கள் என்று ஆரம்பித்து, இந்தியாவிலும், வெளிதேசத்திலும் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார்கள். கடைசி தங்கை **சேபாவை** பக்கத்தில் வைக்க வேண்டும் என்றும், அவளை டீச்சர் ஆக்கவேண்டும் என்று நினைத்பொழுது தரிசனத்தில் சுவிஷேசகரின் வீடு என்று கண்களுக்கு முன்பாக தோன்றி கொண்டே இருந்தது. பின்பு சேபாவையும் ஊழியத்திற்கு அனுப்புவேன் என்று அர்ப்பணித்த பின்புதான் அந்த தரிசனம் மறைந்தது. அதன்படியே சேபாவும் IMS Missionary-ஆக குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார்கள்.

என் தாய் சிறுபிராயத்திலிருந்தே தங்களுக்கு சுவிஷேசம் அறிவித்த மிஷனெரிமார்களையும், துறைமார்களையும், பேராயர்மார்களையும், குருவானவர்களையும், சுவிஷேச ஊழியர்களையும், ஜெபிக்கிற அம்மாமார்களையும் அதிகம் மதிப்பார்கள், உபசரிப்பார்கள், நேசிப்பார்கள். அதே போல்தான் எங்களுக்கும் வழிகாட்டினார்கள். ஆகையால்தான் இன்று அவர்களுடைய பிள்ளைகளும், மூன்று மருமகன்களும் பேராயராகவும், சுவிஷேச ஊழியராகவும், போதகராகவும் ஊழியம் செய்கிறார்கள். குஜராத்தில் ஒருமுறை கூட இயேசுவை அறியாத மக்களுக்கு சுவிஷேசம் கூறி, ஊழியம் செய்து, சபைகளை உருவாக்கி, ஊழியர்களை எழுப்பி, உருவாக்கி இறையியல் படிக்க வைத்து போதகர்களாக மாற்றி, ஷாலோம் Diocese உருவாக்கவும், மருமகன் Bishop ஆக மாறவும் எல்லாவற்றையும் தங்கள் கண்களால் காணும் பாக்கியத்தையும் பெற்றார்கள்.

ஆறாவதாக, சொப்பனங்களையும், தரிசனங்களையும் காண்பவர்கள். வீட்டில் எந்த காரியமானாலும் ஜெபித்து, கர்த்தர் காட்டுகிற தரிசனங்கள், சொப்பனங்கள், வார்த்தைகள் மூலமாக எங்களை நடத்தினார்கள். குறிப்பாக திருமணக் காரியங்களில் எனது தாயாருக்கு மருமகன்களை குறித்து தேவன் முன் கூட்டியே தரிசனத்தில் காட்டுவார். அதன்படியே திருமணங்கள் நடைபெற்றது. மேலும் ஊழியங்களில் எதிர்ப்பு, போராட்டங்கள் வரும்போது ஜெபித்து, தைரியமான வார்த்தைகளைக் கூறி உற்சாகப்படுத்துவார்கள். கர்த்தர் இப்படிக் காட்டினார் என்று தரிசனங்களைக் கூறி எங்களைப் பெலப்படுத்துவார்கள். கஷ்டமான சூழ்நிலையிலும் தன் பிள்ளைகளை ஊழியத்திற்கு அர்ப்பணித்தபடியால், தற்போது தேவன் 5 பிள்ளைகளையும் ஆசீர்வதித்து நல்ல நிலையில் உயர்த்தி, பேரபிள்ளைகளையும் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார்.

2008–ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு சொப்பனம் பார்த்தார்கள். அதில் பரலோகம் கண்களுக்கு முன்பாக தெரிந்தது. பரலோக வாசலில் ஒரு தேவதூதன் நின்று கொண்டு பெரிய பதிவேடு வைத்து ஒவ்வொரு பெயரையும் வாசிக்க வாசிக்க ஒவ்வொருவராய் உட்பிரவேசித்தார்களாம், நான்கு நீண்ட வரிசையாக மக்கள் நின்று கொண்டிருந்தார்களாம். பெயர் வாசிக்கப்பட்டால்தான் உள்ளே பிரவேசிக்க முடியுமாம். அப்பொழுது எனது தாயார், வரிசையில் கடைசி ஆளாக நின்று கொண்டு, எனது பெயர் எப்பொழுது வரும் என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்த வேளையில், ஒரு தேவதூதன் வந்து, நீ நாலாவது வரிசையில் கடைசியாக நிற்கிறாய். ஆகையால் உன் பெயர் வர இன்னும் கொஞ்சம் நேரம் ஆகும் என்று கூறினாராம். பின்பு சொப்பனம் முடிந்தது. ஆகையால் எனது தாயார் கூறுவார்கள் நான் பரலோம் செல்ல ஆயத்தமாகி எழும்பி நான்காவது வரிசையில் நின்று கொண்டிருக்கிறேன். நான்காவது வரிசை என்பது நான்கு ஆண்டுகள் ஆகும். தேவன் காட்டினபடியே அவர்களை நான்கு ஆண்டுகள் கழித்து, தம் பக்கமாய் எடுத்துக்கொண்டார்.

கடைசியாக, மிகவும் திருப்தியான வாழ்க்கை வாழ்ந்தேன் என்று எப்பொழுதும் கூறுவார்கள். ஐந்து பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, படிக்கவைத்து, ஆளாக்கி, திருமணம் செய்து கொடுத்து, ஊழியத்திற்கு அனுப்பி எல்லா கடமைகளையும் நிறைவேற்ற தேவன் கிருபைச் செய்தார். எந்தக் குறைவும் இல்லை. தேவன் பிள்ளைகள் குடும்பத்தையும், பேரபிள்ளைகளையும், ஊழியங்களையும் ஆசீர்வதித்து வருகிறார். எதையெல்லாம் வாழ்க்கையில் இழந்தேனோ அதையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டேன் என்றும் கூறுவார்கள். கடைசியில், எனது மூத்த பேரன் டைட்டஸ் உடைய திருமணத்தை மட்டும் நான் பார்க்கவேண்டும். அதற்கு பின்பு தேவராஜ்யம் போகவேண்டும் என்று கூறுவார்கள். அந்த வாஞ்சையையும் தேவன் நிறைவேற்றினார். 06–08–12 அன்று டைட்டஸ்–மெர்லின் திருமணத்தைப் பார்த்து மிகுந்த சந்தோஷம் அடைந்தார்கள். அடுத்தபடியாக கடைசிக் காலங்களில் யாருக்கும் பாரமாக இருக்கக்கூடாது என்றும், கை,கால் திடமாய் நன்றாக நடந்து கொண்டிருக்கும்போதே தேவனிடத்தில் போக வேண்டும் என்றும் ஜெபிப்பார்கள். அதையும் தேவன் நிறைவேற்றினார் மற்றும் கர்த்தர் அவருடைய வேளையில் என்னை எடுத்துக்கொள்வார். ஆகையால் எந்த மருந்தும், மாத்திரைகளும் எடுக்க மாட்டேன் என்று கூறுவார்கள். இவ்வாறு எந்தக் காரியத்திலும் ஒரு திருப்தியை பெற்றவர்கள்.

இந்த ஜனவரி மாதத்தில் கூட எப்பொழுதும் ஆலயம், ஜெபம், கூட்டங்கள் எல்லாவற்றிலும் மிகவும் உற்சாகமாய் பங்குபெற்றார்கள். கடந்த ஜனவரி மாதத்தில் நாசரேத் ஆலயத்தில் நடைபெற்ற தேசத்திற்கான ஜெபத்தில் கூட முழு நேரமும் பங்குபெற்று ஜெபித்தார்கள். மரித்த 20–01–13 அன்று காலையிலும் தேவன் என்னை எடுத்துக் கொண்டால் நல்லது என்று எனது தம்பியிடமும், தம்பியின் மனைவியிடமும் கூறினார்கள். பின்பு பாளையங்கோட்டையில் ஞாயிறு ஆராதனையில் பங்குபெற்று, மிகுந்த சந்தோஷத்துடன் வீடு திரும்பினார்கள். மாலையில் 5 மணி அளவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். நல்ல போராட்டத்தை போராடி ஓட்டத்தை முடித்தார்கள். இதுமுதல் நீதியின் கிரீடம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். நீதி 31 ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளபடி குணசாலியான ஸ்திரீயாக வாழ்ந்தவர்கள். நீதி. 31:28ம் வசனத்தின்படி **“அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்”. நாங்களும் பிள்ளைகளாக எங்கள் தாயாரை பாக்கியவதி என்று வாழ்த்துகிறோம்.**

– சகோதரி. **வஹிதா தேவதாஸ்**

# ஊழியர்களின் மனைவிமார்களுக்கான புது வருட சிறப்புக் கூட்டம்



கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஜனவரி மாதம் அனைத்து 467 ஷாலோம் ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று சிறப்புக் கூடுகைகள் நடத்த தேவன் கிருபைச் செய்தார். முதலாவது கூடுகை குஜராத் ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று நடைபெற்றது. இந்த கூடுகை கடந்த 26.01.2013 அன்று தாகோத் என்ற இடத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை சகோதரி.வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்கள். இக்கூட்டம் காலை சரியாக 11 மணிக்கு தொடங்கியது. பாடல் ஆராதனையை சகோதரி.வஹிதா தேவதாஸ் அவர்களுடன் நம் சகோ.ஃப்ராங்க்ளின் அவர்களும் சேர்ந்து நடத்தினார்கள். ஆராதனை வேளை மிக அருமையாக இருந்தது. எல்லா ஊழியக்காரிகளும் பரிசுத்த ஆவியில் நிறைந்து துள்ளிக் குதித்தனர். கரங்களை உயர்த்தியபடி எல்லோரும் தேவனைத் துதித்தார்கள். இது போலவே மத்தியப்பிரதேசத்தில் உள்ள நமது ஊழியர்களின் மனைவிமார்களுக்கும் கடந்த 28.01.2013 அன்று தாகோத்தில் வைத்து கூட்டம் நடந்தது. இங்கும் ஆராதனை வேளையில் எல்லா ஊழியக்காரிகள் மேலும் ஆவியானவர் இறங்கினார். அனைவருக்கும் இது மிகப் பெரிய ஆசீர்வாதமாக இருந்தது. அடுத்து 29.01.2013 அன்று இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள நம் ஊழியர்களின் மனைவிமார்களுக்கு கூட்டம் நடந்தது. இக்கூட்டம் செவனியா கிராமத்தில் உள்ள சபையில் வைத்து நடைபெற்றது. இங்கும் ஊழியக்காரிகள் ஆவியில் நிறைந்து நடனமாடி துதித்தது மட்டுமல்ல அர்ப்பணிப்பான ஆராதனை மூலமாக தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

மேற்கண்ட மூன்று கூட்டங்களிலும் சகோதரி.வஹிதா தேவதாஸ் அவர்கள் **பெனியேல்** என்ற தலைப்பின் கீழ் யாக்கோபைக் குறித்து (நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி, அந்த ஸ்தலத்துக்கு பெனியேல் என்று பேரிட்டான். ஆதியாகமம் 32:30) என்ற வசனத்திலிருந்து

- மனிதனோடு போராடி வெற்றி பெற்ற இடம்
- தேவனோடு போராடி ஆசீர்வாதம் பெற்ற இடம்
- தேவனை முகமுகமாய் தரிசித்த இடம்

போன்ற கருப்பொருட்களின் அடிப்படையில் தேவ செய்தியை வழங்கினார்கள். இந்த செய்தியானது மூன்று மாநிலத்தின் ஊழியக்காரிகளுக்கும் மிகவும் பிரயோஜனமாக இருந்தது. இக்கூட்டங்களில் அநேக ஊழியக்காரிகள் தாங்களுக்கு செய்த நன்மைகளை சாட்சியாகக் கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். அதோடு கூட பீல் மக்களின் அறுவடைப் பணியில் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்களுக்காகவும் விசேஷமாக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பல்வேறு தொலைதூரங்களிலிருந்தும் இக்கூட்டங்களுக்கு ஊழியக்காரிகள் வந்திருந்ததால் அனைவருக்கும் மதிய உணவு கொடுக்கப்பட்டது. பயணச் செலவுகளும் வழங்கப்பட்டது. அனைவரும் புதிய அபிஷேகத்துடனும், புதிய தரிசனத்துடனும் கடந்து சென்றார்கள். தேவனுக்கே மகிமை!




# வேதம் வழங்குவோம் வாருங்கள்

***பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு***

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் மற்றும் பீல் ஆதிவாசி வாலிபர்களுக்கு புதிய ஏற்பாடுகள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2010 ம் ஆண்டில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 7 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் **“சிறப்பு விருது”** கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம்...

உங்களில் பலர் கடந்த ஆண்டில் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

2013ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 10000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் மற்றும் 5000 புதிய ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. ரூ. 100/– வீதம் 10000 வேதாகமங்களுக்கும், வாலிபர்களுக்குக் கொடுப்பதற்காக ரூ. 50/– வீதம் 5000 புதிய ஏற்பாடுகளுக்கும் நிதி உதவித் தேவைப்படுகிறது. நிதி உதவி **ரூ. 10,25000/–** கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்கள் மற்றும் புதிய ஏற்பாடுகளை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம்.

அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என்பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.** சங்கீதம். 119 : 105

# 2013 B i ¥ t Lô ]
# T ¦ jR [ §hPeLs



- ★ **200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்புதல்.**
- ★ **300 புதிய ஆராதனை குழுக்கள்** (சபைகள்) உருவாக்குதல்.
- ★ **6,000 சபை மூப்பர்களுக்கான** 2 நாட்கள் சிறப்புக் கூடுகை, 300 பேர்களாக – 20 முகாம்கள்
- ★ **5,000 வாலிபர்களுக்கான** சிறப்பு முகாம்கள் 250 பேர்களாக ‑ 20 முகாம்கள்.
- ★ **10,000 சிறுவர்களுக்கான** சிறப்பு முகாம்கள் 250 பேர்களாக ‑ 25 முகாம்கள்.
- ★ **600 ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களுக்கு** சிறப்புப் பயிற்சி (4 மாதங்களுக்கு ஒருமுறை).
- ★ **25,000 பெண்களுக்கான** சிறப்பு முகாம்கள் 1000 பேர்களாக – 25 முகாம்கள்
- ★ **300 திருமண்டல தலைமை போதகர்களுக்கு** தலைமைத்துவ பயிற்சி முகாம்கள் – 75 பேர்களாக – 4 முகாம்கள்.
- ★ **30,000 இளம் சிறார்களுக்கான** CBC (VBS) 10 நாட்கள் வகுப்பு மற்றும் (மே மாதம்) 1,000 CBC ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி.
- ★ **30 தாலுகாக்களில்** ஜெப முகாம் நடத்துதல் (முழு தாலுகாவின் இரட்சிப்பிற்காக)
- ★ **200 கிராம ஆலயங்கள் கட்டப்படுதல்.**
- ★ **600 கிராமங்களில்** சிறப்பு **எழுப்புதல் மற்றும் சுகமளிக்கும் கூட்டங்கள்** பிரதி வெள்ளிக் கிழமை தோறும் 12 இடங்களில் 50 வாரங்கள் நடத்துதல்.
- ★ **2 மாநிலங்களில்** (ம.பி, குஜராத்) **ஷாலோம் ஆத்மீக பயிற்சி நிலையம்** (Shalom Spiritual Life Centre) உருவாக்குதல்.
- ★ **1 ஷாலோம் வேதாகமப் பள்ளி** (ஜுலை 1) ஆரம்பித்தல். **(Shalom Bible Institute)**
- ★ 24 மணி நேரமும் கர்த்தரிடம் விண்ணப்பிக்கும்படியாக **ஜெப கோபுரம்** தாகோத், குஜராத்தில் கட்டுதல்.
- ★ ஆடியோ, வீடியோ மூலமாக ஹிந்தி, குஜராத்தி மற்றும் **பீலி, பிலோடி, வாகுடி** மொழிகளில் **பாடல்கள், செய்திகள் வெளியிடுதல்.**
- ★ ஷாலோம் ஆவிக்குரிய **எழுப்புதல் பத்திரிக்கை** குஜராத்தி, ஹிந்தி மொழிகளில் வெளியிடுதல் மற்றும் **ஆவியானவர் தரும் இதர ஊழியங்கள்.**

## சிலுவையில் தொங்கிய தெய்வமகன்

தீய மனிதரும் பாவிகளும்
மாய உலகினில் பெருகியதால்

தீபம் நீங்கி உலகினிலே
பாவம் பெருகி பரவியதே!

தூசி மானிட கரங்களிலே
ஆசி இழந்த மண்ணுலகம்!

சுத்தம் செய்ய வேண்டுமென்று
சித்தம் கொண்டார் பரமப்பிதா!

இல்லை என்று சொல்லாமல்
எல்லை இல்லா அன்பு கொண்டு

தொல்லை நிறைந்த உலகினிலே
பிள்ளையாக பிறந்தாரே

அலை கடலை அதட்டியவர்
தலை முழுதும் முள்முடியே!

பிணி நீக்கிய கைகளிலே
ஆணி அடித்த பரிதாபம்!

சேர்த்து இரண்டு கால்களிலும்
கோர்த்து ஆணி அடித்தனரே!

விண்ணிலே இருந்து வந்தவர்
மண்ணிலே இரத்தம் சிந்திவிட்டு

நடந்தே ஊழியம் செய்தவர்
கடந்தே போனார் உயிர்விட்டு!

அன்றாம் ஞாயிறு அதிகாலை
மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்!

புவி மானிடர் மனம்திரும்ப
சுவி சேஷம் சொல்லியவர்

கூவி உங்களை அழைக்கின்றார்
தாவி ஓடி வாருங்களேன்!

ஆவி போகும் வரையிலுமே
கவி பாடி தினந்தோறும்

பாதகர் பலரை மாற்றுகின்ற
போதகர், மிஷனெரியைத் தாங்கிடுவோம்!

**Rev. S. சந்திர குமார்,** தூத்துக்குடி

## உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...

***அன்பான ஆதரவாளர்களே,***

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

## ஷாலோம் பிரதிநிதிகள் தேவை....

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஷாலோம் பணித்தளங்களில் ஊழியங்கள் வளர்ந்து பெருகி வருகின்றன. அதே நேரத்தில் அதற்கான தேவைகளும் அதிகரித்து வருகின்றன. இதற்காக தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளை சேகரித்து அனுப்பும், **ஷாலோம் பிரதிநிதிகள்** 300 பேர் தேவை. கர்த்தரால் ஏவப்படுவோர் எங்களைத் தொடர்பு கொள்ள அன்பாய்க் கேட்கிறோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# 10 இலட்சம் ஆத்தும ஆதாயப் அறுவடைத் திட்டத்தின் மூலமாக நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தின் சில சாட்சிகள்



**பெயர் : சுமித்ரா பேன்**

**கிராமம் : பாட்டன்புரா, குஜராத்**


நான் சில நாட்களுக்கு முன்பதாக கடுமையான காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். இதற்காக மந்திரவாதிகளை நாடி பலனில்லை ஆகையால் மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கே எனது சரீரத்தில் இரத்தம் குறைவாக உள்ளது எனக் கூறி 2 பாட்டில் இரத்தம் ஏற்றினார்கள். அதன் பிறகு எனது உடல் நிலை மிகவும் மோசமாக மாறி, எனக்கு சுய நினைவு இல்லாமல் போய் விட்டது. அதன் பின் எங்கள் குடும்ப நண்பர் ஒருவரின் ஆலோசனைப்படி பாட்டன்புரா சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற அழைத்துச் சென்றார்கள். அங்கு ஊழியர் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார். சிறிது நேரத்திலேயே எனக்கு சுய நினைவு திரும்பியது. இப்போது நான் பரிபூரண சுகத்துடன் இருக்கிறேன். **தேவனுக்கே மகிமை!**



**பெயர் : பாசுபேன் மாலா மெய்டா**

**கிராமம் : ஜெரி, குஜராத்**

நான் கடந்த 9 வருடங்களாக ஆஸ்துமா வியாதியினால் பாதிக்கப்பட்டு இருந்தேன். என்னால் கொஞ்ச தூரம் கூட நடக்க இயலாது உடனே மூச்சுத்திணரல் வந்துவிடும். இதற்காக நான் எவ்வளவோ செலவு செய்தும் எனக்குக் குணமாகவில்லை. கடைசியாக குஜராத்திலுள்ள ஜெரி கிராமத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் எனக்கு சுகம் கிடைக்கும் என்ற விசுவாசத்தோடு பங்கு பெற்றேன். அதே போல் ஊழியர் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும் போது நான் குணமடைந்ததை உணர்ந்தேன். இப்போது நன்றாக உள்ளேன். **தேவனுக்கே மகிமை!**



**பெயர் : புஞ்சி பேன் புரியா**

**கிராமம் : பத்ரா, மத்தியப்பிரதேசம்**

நான் பல மாதங்களாக அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு, நிம்மதி இல்லாமல் வாழ்ந்து வந்தேன். எப்போது அசுத்த ஆவியினால் நான் கட்டப்பட்டேனோ அப்போதிலிருந்தே எனக்கு 2 இரண்டு காதுகளும் கேட்காமல் போய் விட்டது. இப்படியாக பல மாதங்கள் அவதிப்பட்டேன். சமீபத்தில் பத்ரா சபையில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அங்கு ஊழியர் எனக்காக ஜெபித்த போது என்னைக் கட்டி வைத்திருந்த அசுத்த ஆவி என்னை விட்டு வெளியேறியது. உடனே செவிடாய் இருந்த எனது காதுகள் திறந்தது. **தேவனுக்கே மகிமை!**

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...



❋ நம் தலைமுறையில் முழு பீல்மக்களுக்கும் சுவிஷேசம் அறிவிக்கப்படவும், 2020க்குள் 7000 கிராமங்களில் 7000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

❋ ஷாலோம் திருமண்டல சபை பணிகளின் வளர்ச்சிக்காகவும், ஷாலோம் மிஷனெரிப் பணிகளின் திட்டங்களுக்காகவும், ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

❋ பணித்தளத்தில் எழும்புகிற சத்துருவின் போராட்டங்கள் நிர்மூலமாகவும், தேவன் ஊழியர்களின் குடும்பங்களுக்கு நல்ல சுகத்தைக் கட்டளையிட்டு, ஊழியர்களை ஞானவரங்களினாலும், வல்லமையினாலும் நிரப்பி, பிரயாணங்களில் பாதுகாவலைத் தரும்படியாக ஜெபியுங்கள்.

❋ ஷாலோம் ஊழியங்களை நேசித்துத் தாங்கும் ஊழிய ஸ்தாபனங்கள், சபைகள் மற்றும் விசுவாசக் குடும்பத்தார்களையும் தேவன் அதிகமாய் ஆசீர்வதிக்க மற்றும் ஷாலோம் பிரதிநிதிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

❋ தூத்துக்குடி தலைமை அலுவலகப் பணியாளர்கள் குடும்பங்கள், குஜராத் தாகோத் பணித்தள அலுவலக பணியாளர்கள் குடும்பங்கள், முன்னேற்றப் பணியாளர்கள் குடும்பங்கள், பணித்தளத்தில் Project பணியாளர்கள் குடும்பங்களை ஆசீர்வதித்து தேவன் ஒவ்வொருவரையும் வல்லமையாகப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

❋ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் மற்றும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

❋ ஷாலோம் ஊழியத்தின் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள் மற்றும் வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள் மற்றும் பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.

❋ தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களில் அநேக கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. அதற்குத் தேவையான நிதித்தொகைகள் கிடைக்க பெற ஜெபியுங்கள். மேலும் அநேக கிராமங்களில் ஆலய கட்டுமானம் ஆரம்பிக்கப்பட உள்ள பணிகள் ஆசீர்வாதமாக இருக்க, தடைகள், எதிர்ப்புகள் நீங்கும்படியாக ஜெபியுங்கள்.

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

# Yôd Ï jRjR BºoYôR ù_Td áÓûL

| | |
|---|---|
| நாள் : **01.03.2013 (வெள்ளி)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

# ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| | |
|---|---|
| நாள் : **16.03.2013 (சனிக்கிழமை)** | நேரம் : **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 12.00 மணி வரை 24 மணிநேரம்** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க விரும்பினால் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **09.03.2013, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820



# ùTt± ¡Ãu *- மிஷனெரி விமானி"*

**"மேகத்தைப்போலவும் பலகணித் துவாரங்களுக்குத் தீ விரிக்கிற புறாக்களைப் போலவும் பறந்துவருகிற இவர்கள் யார்?** ஏசாயா : 60 :8"

பெற்றி கிரீன் 1920–ம் ஆண்டு, ஜீன் மாதம் 24–ம் நாள் அமெரிக்காவில் வாஷிங்டன் மாநிலத்திலுள்ள சியாட்டில் என்னுமிடத்தில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே விமானியாக வேண்டும் என்ற விருப்பம் இவருக்கு இருந்தது. இவர் பிரஸ்பிடேரியன் பிரிவை சார்ந்த பக்தியான பெண். இவருடைய ஆலய வாலிபர் குழுவில் மகிழ்ச்சியோடு ஊழியம் செய்தார். வயதான கிறிஸ்தவப் பெண்மணி ஒருவர் பெற்றிக்கு விமானத்தில் பணியாற்றும் ஆர்வத்தை அறிந்து, அதனோடு அவருடைய மிஷனெரி ஊழிய ஈடுபாட்டையும் இணைத்துச் செயல்படுத்த ஆலோசனை வழங்கினார். பெற்றி அவரின் ஆலோசனை சரியான வழிகாட்டுதலாக இருப்பதை உணர்ந்தார். நேரத்தை மிச்சப்படுத்துவதற்கும், சில வேளைகளில் உயிரைக் காப்பாற்றுவதற்கும், மிஷனெரிகளின் பயணக் கஷ்டங்களை நீக்குவதற்கும் இப்பணி பயனுள்ளதாக அமையும் என்று நம்பினார்.

தேவன் விமானத்தைப் பயன்படுத்தி தன் ஊழிய எல்லையை விரிவுபடுத்த தன்னை அழைக்கிறார் என்பதை உணர்ந்தார். விமானங்களை பயன்படுத்தி நற்செய்தியைப் பரப்பி உதவ விரும்பினார். பெற்றியின் பெற்றோருடைய அனுபவங்களும் நேர்மையான சேவையும் மிஷனெரி ஏவியேஷன் ஃபெல்லோஷிப் (Missionary Aviation Fellowship) (MAF) என்ற உலகளாவிய ஊழியம் ஸ்தாபிக்கப்பட உதவியாயிருந்தது. MAF இன்று 31 நாடுகளில் 101 விமானங்களை இயக்கி சேவை புரிந்து வருகிறது.

இரண்டாம் உலகப் போர் துவங்கியதால் பெண்கள் விமானத்தை இயக்க கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இத்தருணத்தில் விமானத்தை இயக்குவதில் மேலும் நல்ல தேர்ச்சிபெற பெற்றி, விமானப்படையில் பயிற்சி பெற்றார். (WASP-Women's Airforce Service pilots) அங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களோட துணிச்சலான பல்வேறு பணிகள் செய்யும் நல்ல அனுபவம் கிடைத்தது. எந்தப் பாதையில் தேவன் நம்மை நடத்திச் சென்றாலும் அவை பின் நாட்களில் அவருடைய பணியில் நமக்கு கொடுக்கப்படும் வேலையை செய்வதற்கு நம்மை ஆயத்தப்படுத்த முடியும் என்பதை அறிந்திருந்தார்.

பின்னர் WASP கலைக்கப்பட்டது. பெற்றிக்கு கிறிஸ்துவின் மேலும் விமானத்தில் பயணம் செய்வதிலும் பேரார்வம் இருந்தது. விமானப் பயணம் எவ்வாறு கிறிஸ்தவ ஊழியத்தை மேம்படுத்த உதவும் என்பது பற்றி கிறிஸ்தவ பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதினார். மூன்று அமெரிக்க இராணுவ விமானிகள் அதற்குப் பதிலளித்தனர். அதில் விமானத்தில் பறக்கும் கலையையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி, இயேசுவின் அன்பை அறிந்திராத மக்களோடு பகிர்ந்து, அவர்களை மறுரூபப்படுத்த தாங்கள் கொண்டிருக்கும் தரிசனத்தை அவரோடு பகிர்ந்து கொண்டனர்.

பெற்றி கிரீன் கலிஃபோர்னியா சென்று, மிஷனெரி ஏவியேஷன் ஃபெல்லோஷிப் ஸ்தாபிக்க உதவியாயிருந்தார். அது இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளிலுள்ள கிறிஸ்தவ விமானிகள் அடங்கிய குழுவாகும். அந்த அமைப்பு பணித்தளங்களின் விமான போக்குவரத்து வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. இவ்வாறாக பெற்றி கிரீனின் கனவு நனவாகியது. 1946–ல் விக்லிஃப் வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் கூட்டு முயற்சியில் MAF-ன் விமானத்தை மெக்ஸிகோவிலுள்ள ஒரு தூர பகுதியிலுள்ள வனப்பயிற்சி கூடாரத்திற்கு மிஷனெரிகளை பெற்றி ஏற்றிச்சென்றார். MAF- ன் முதல் விமானத்தை இயக்கியவர் என்ற மரியாதையும் பெற்றார். இவ்வாறாக அவர் MAF- ன் முதல் அலுவலக விமானியானார். அவருடைய துணிச்சலான முயற்சியினால், அநேக சாதனைகளையும் புரிந்தார். இவ்வாறாக பெற்றியின் ஊழியத்தினிமித்தம் தேவ நாமம் மகிமைப்பட்டது. தேவன் பெற்றியை என்ன நோக்கத்திற்காக ஆயத்தப்படுத்தினாரோ அதை தன்னுடைய 26–ம் வயதில் அவர் செய்தார். வனப்பயிற்சி கூடாரத்திற்கு மிஷினெரிகளை விமானத்தில் ஏற்றிச் செல்ல ஆகும் நேரம் நாற்பத்தைந்து நிமிடங்களே. அதே வேளையில் வனப்பகுதியை நடந்து, கடந்து செல்ல 10 நாட்கள் முதல் 2 வாரங்கள் ஆகும். மொத்தத்தில் மிஷனெரிகளின் காரியங்களுக்காக பெற்றி விமானத்தில் பறந்தது 4800 மணி நேரங்களாகும். அவர் மெக்சிகோ , பெரு, ஆப்பிரிக்கா, இந்தோனேஷியா நாடுகளிலும் சேவை புரிந்துள்ளார்.

MAF- ன்1945–ம் ஆண்டு, அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் விமான ஆய்வகம் மற்றும் கல்வி வல்லுனர்களின் மிஷனெரி குழுக்கள் தொலை தூரங்களுக்குச் செல்வதிலிருந்த தடைகளை தகர்த்தெறியவும், உலகிலுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ நிறுவனங்கள் மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுவதற்கும் உதவி செய்யும் நோக்கங்களோடு ஏற்படுத்தப்பட்டது. புதிய அமைப்பை உள்ளடக்கி MAF- இன்று 31 நாடுகளில், சராசரியாக தினமும் 101 விமான சேவைகளை ஆப்பிரிக்கா, யூரேஷியா மற்றும் லத்தீன் அமெரிக்கா வழியாக செய்து வருகிறது. MAF- விமானிகள், மிஷனெரிகள் மருத்துவத்துறையில் பணியாற்றுபவர்கள், மருந்துகள் நிவாரண உதவிப்பொருட்களை ஏற்றிச் செல்லவும் ஆபத்தான இடத்திலிருந்து மக்களை பாதுகாப்பான இடத்திற்கு அவசர உதவிக்கு அனுப்பும் சேவையையும் செய்து வருகிறது. MAF- செயற்கைக்கோள் இணையதளம், உயர் அலைவரிசை வானொலிகள், மின் அஞ்சல் மற்றும் பிற கம்பியில்லா அமைப்புகள் போன்ற தொடர்பு சேவைகளையும் அளிக்கிறது.

பெற்றி 1962 –ம் ஆண்டு களப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார். என்றாலும் தொடர்ந்து MAF க்காக விமானங்களை அவ்வப்போது இயக்கி வந்தார். இறுதியாக, தன் வாழ்நாளின் கடைசி வருடங்களை கழிப்பதற்கு சியாட்டில் திரும்பினார். மூளை நரம்பு நோயினால் பாதிக்கப்பட்ட பெற்றி கிரீன், 1997 –ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 10– ம் நாள், தன்னுடைய 76 –ம் வயதில் வாஷிங்டனில் சியாட்டில் அருகிலுள்ள தன் இல்லத்தில் இறந்தார்.

## காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- D.D. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

---

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : MBL0000106)**

---

**AXIS BANK (U.T.I)**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

*குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப....*

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக நீங்கள் காணிக்கை செலுத்திய தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களைத் தொடர்பு கொண்டு தாங்கள் செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்....

வட – கிழக்கு அமெரிக்க மாநிலங்களில் உக்கிரமான பனிப்புயலால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி மிகவும் சிரமப்பட்டு வந்தனர். மஸாச்சூசெட்ஸ், ரோட் ஐலண்ட், கெனக்டிகட், நியு யார்க் மற்றும் மயின் போன்ற மாகாணங்களில் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சூரைக்காற்றினால் மரங்கள் சாய்ந்து விழுந்தால் மின்சாரக் கம்பிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அனைத்து விமான சேவைகளும் ரத்து செய்யப்பட்டன. இதில் குறைந்தது 300 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

---

உலகில் மிகவும் அரிதாகக் காணப்படும் குள்ள யானை இனத்தைச் சேர்ந்த 10 யானைகள் சபா மாநிலத்தில் உள்ள போர்னியோ தீவில் இறந்து காணப்பட்டுள்ளன. குணாங் ராரா வனப்பகுதியில் திரிந்த இந்த யானைகள் விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். ஆசிய யானைகளை விட போர்னியோ யானைகள் குள்ளமானவை. வனப்பகுதியில் 1500 குள்ள யானைகளே இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

---

இந்தியாவில் கடந்த மாதத்தில் பன்றிக் காய்ச்சல் (ஸ்வைன் ஃப்ளு) தொற்று நோயினால் 94 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் பெரும்பாலானோர் பன்றிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வைரஸினால் உலகெங்கிலும் சுமார் 2 லட்சம் பேர் பாலியாகியுள்ளர்.

---

நண்டு, இரால் போன்ற ஓடுடைய நீர் விலங்குகள் தமது ஓட்டிலேயே வலியை உணருகின்றன என்பதற்குக் கூடுதல் தடயங்கள் கிடைத்துள்ளன. நாம் சாப்பிடும் வகையை ஒத்த ஒரு கரை நண்டு வவைகள் தமது ஓட்டின் மேல் மின்சாரம் பாயும் போது அதனை உணருகின்றன என்றும், மின்சாரம் வருகிறது என்று தெரியும் இடங்களை அவை தவிர்க்கப் பார்க்கின்றன என்றும் புதிய ஆய்வு ஒன்று கூறுகிறது.

நன்றி : www.bbc.co.uk


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## கிராம ஆலயம்

# தனசியா குஜராத்



குஜராத் கிராமத்தில் உள்ளடங்கிய பகுதிதான் இந்த தனசியா கிராமம் ஆகும். இங்குள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறியாமல், மிகவும் முரட்டாட்டமாய் அனைத்து விதமான பாவங்களையும் செய்து வந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் சகோ. சுரேஷ் பாய் அவர்கள் குடும்பமும் வாழ்ந்து வந்தது. 1996ஆம் ஆண்டு சகோ. சுரேஷ்பாய் அவர்களின் தாயார் பிசாசின்பிடியில் சிக்கி மிகவும் சிரமப்பட்டு வந்தார்கள். மட்டுமின்றி அவர்கள் குடும்பத்திலுள்ள அனைவருமே காக்கா வலிப்பு நோயினால் கஷ்டப்பட்டு வந்தனர். இதற்காக சுமார் ரூ. 1½ இலட்சத்திற்கும் அதிகமாக செலவு செய்து மருத்துவம் மற்றும் மந்திரவாதிகளிடம் சென்று கோழி, ஆடுகளை வெட்டியும் பலன் கிடைக்காமல் சோர்ந்து போன நிலையில் இருக்கும் போது, ஷாலோம் விசுவாசி சகோ. சகன்பாய் டாங்கி அவர்கள் 30 கீ.மீ தூரத்திலுள்ள மத்தியப்பிரதேச மாநிலத்தில் அந்தர்வேலியா கிராம ஷாலோம் சபைக்கு குடும்பமாய் ஜெபிக்கும்படி அழைத்துச் சென்றார். அங்கு அவர்களுக்காகச் சபையில் அனைவரும் இணைந்து ஜெபித்தபோது தேவன் அவர்கள் ஜெபத்தினைக் கேட்டு, பிசாசின் பிடியில் இருந்தும் இழுப்பு நோயில் இருந்தும் அந்த குடும்பத்தினருக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தவுடன், அந்தக் குடும்பம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது.

அதன்பின் குஜராத்திலுள்ள ஜெரி கிராம ஷாலோம் சபைக்குச் சென்று தேவனை ஆராதித்து வந்தனர். 2006ம் ஆண்டில் தனசியா கிராமத்தில் மொத்தம் 6 குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது. இந்த 6 குடும்பத்தாரும் இணைந்து சகோ. சுரேஷ் பாய் அவர்கள் வீட்டில் சபையாகக் கூடி தேவனை ஆராதிக்க ஆரம்பித்தனர். 2007ம் ஆண்டு சகோ. சுரேஷ் பாய் ஊழிய அழைப்பினைப் பெற்று, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து குறுகிய கால வேதாகமப் பயிற்சி பெற்று தனது சொந்த கிராமமான தனசியாவை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறார். நாளுக்கு நாள் விசுவாசிகள் பெருகவே, தேவனை ஆராதிக்க அவரது வீடு பற்றாக்குறையானது ஆகையால் ஆலயம் கட்ட தனது சொந்த நிலத்தை காணிக்கையாகத் தந்தார். அந்த இடத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்ட பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த ஆலயத்தில் 45 குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர்.

இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த **Dr. சுரேஷ் J. பால்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 200 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**



# பீல் ஆதிவாசி மாணவர்

## பராமரிப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | சாமுவேல் அரவிந்த் |
| தந்தையின் பெயர் | : | அரவிந்த் டாமோர் |
| தாயார் பெயர் | : | நந்துபேன் மேய்டா |
| பிறந்த நாள் | : | 27.06.2002 |
| படிக்கும் வகுப்பு | : | 3ம் வகுப்பு |
| சொந்த ஊர் | : | லிம்பாகேடி |
| மாவட்டம் & மாநிலம் | : | தாகோத், குஜராத் |

### மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–

இவனுடைய தந்தை சகோ. அரவிந்த் டாமோர் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். அனைத்துப் பாவங்களுக்கும் அடிமையாக இருந்தார். அசுத்த ஆவிகளை வணங்கி வந்தும், தேவதைகள், மந்திரவாதிகளை நாடி பூஜை செய்தும் வாழ்ந்து வந்தார். இதனால் குடும்பத்தில் சமாதானம் ஏற்படாமல், வியாதியே ஏற்பட்டது. ஷாலோம் ஊழியத்தை குறித்து கேள்விப்பட்டு நமது ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார். தொடர்ந்து ஜெபித்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்த போது தேவன் ஊழியத்திற்கு அழைத்தார். இப்போது தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்கிறார்.

**மாணவனைக் குறித்து :–** சாமுவேல் நன்றாக படிப்பான். ஆலயத்திற்கு தவறாது செல்வான்.

**ஜெபியுங்கள்:–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** ***Mr. J.M. Kingsly - Thoothukudi***

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 249 மாணவர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப் படுகிறார்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக அறிமுகப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். ***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம்.